பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை)

ராஜா அண்ணுமலைபுரம், மதராஸ்-28.

' முயற்சி திருவினை யாக்கும் "

தொகுதி 25 | சார்வரி ௵ கார்த்திகை மீ 1960 நவம்பர் மீ | பகுதி 8

பொருளடக்கம்

		பக்கம்
பத்திராதிபர் குறிப்புகள்	...	139
சிறுவர்களுக்கு நீதிக் கதைகள்	...	140
புதிய பஞ்சாயத்து முறையும் கல்வியும்	...	142
தேசீயக் கல்வி	...	143
ஆன்மீகக் கல்வி	...	144
செய்தித் திரட்டு	...	146
ஐரோப்பாவின் மிக உயரமான கட்டிடம்	...	148
Government Orders	...	149
" தமிட் குடி " (பாட்டு)	...	151

உள் நாடு : வருஷ சந்தா ரூ. 2.00 தனிப் பிரதி 25 ந.பை.

பாலர் கல்வி

தொகுதி 25	சார்வரி ஹு கார்த்திகை மீ 1960 நவம்பர் மீ	பகுதி 8

பத்திராதிபர் குறிப்புகள்

பிரதமர் நேருஜியின் பிறந்த நாள்

பிரதமர் நேருஜியின் பிறந்த நாளைக் குழந்தைகள் தினமாக நாடு பூராவும் கொண்டாடினேம். இது நேருஜி குழந்தைகளிடத்தில் வைத்திருக்கும் அன்பைக் காட்டுவதுமல்லாமல், நாட்டிற்குக் குழந்தைகளே சொத்து என்பதைக் காட்டுகிறது. வருங்கால மக்களாகிய குழந்தைகளை நாம் எவ்வளவு கவனிக்க வேண்டுமென்கிற அவசியத்தை எடுத்துக் காண்பிக்கிறது. அப்படிப்பட்ட குழந்தைகளைத் தாய் தகப்பன் ஐந்து வயது வரை வளர்த்து ஆரம்ப ஆசிரியரிடம் ஒப்படைத்துவிடுகிருர்கள். குழந்தைகள் பகல் பொழுதில் 9, 10 மணி முதல் 6 மணி நேரம் பள்ளியிலேயே கழிக்கும் வழக்கம் ஏற்பட்டுவிட்டது. ஆரம்ப ஆசிரியரின் பொறுப்பு எவ்வளவு என்பது இதிலிருந்து தெரியவரும். இந்தக் காரணத்தினுல்தான் ஆரம்பக் கல்விக்கு நாடு பூராவும் முக்கியத்துவம் கொடுக்க சர்க்கார் முன் வந்திருக்கிருர்கள். இது வரவேற்கத்தக்கது.

ஆரம்ப ஆசிரியரின் வாழ்க்கைத் தரம்

ஆரம்பக்கல்வி முன்னேற பாடசாலைக் கட்டிடங்கள், மேஜை, நாற்காலி, பெஞ்சுகள், போர்டுகளைத் தவிர ஆசிரியரும் மாணவர்களும் தேவை. மாணவர்கள் 6 வயதிலிருந்து 11 வயது வரையாவது பள்ளிக்கு வரவேண்டுமென்ற தூண்டுதலைச் சர்க்கார் செய்ய வேண்டியது அவசியமே. ஆனுல், அதைப் போலவே அவசியமானது ஆசிரியரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பிரச்னை. கட்டடம், பெஞ்சுகள், குழந்தைகள் எல்லாம் அமைந்தாலும், ஆசிரியர் ஒருவர் அங்கு இல்லாவிட்டால், அது வகுப்பு அல்லது பாடசாலை என்று ஆகாது. இந்த உண்மையைத்தான் பொதுஜனங்கள் உணர வேண்டும். பெற்ருேரின் முக்கிய பொறுப்பை ஆசிரியர் ஏற்று நடத்தும் பொழுது, ஆசிரியரின் அந்தஸ்தை உயர்த்துவது பெற்ருேரின் கடமை. தற்கால ரீதியில் பெற்ருேர்கள் இதை ஜன நாயக சர்க்காரின் பொறுப்பு என்று சொல்லலாம். அக்காரணத்தினுலேயே, ஆசிரியர்கள் தங்கள் நிலையை சர்க்கார் உயர்த்த பெற்ருேரின் ஆதரவைத் தேடுகிருர்கள்.

ஆரம்ப ஆசிரியர் கேட்பதெல்லாம்

ஒரு எளிய வாழ்க்கைக்குப் போதுமான சம்பளம்தான். சமீபத்தில் மாதம் நூறு ரூபாய் குறைந்த பக்ஷ சம்பளம் தேவை யென சம்பளத்திட்டம் கொண்டு வந்தும், சர்க்கார் அச்சம்பளத்திற்கு ஆரம்பப் பள்ளிகளில் வேலைசெய்யும் 2,388 லோயர்கிரேடு ஆசிரியர்களும், 65,008 ஹையர்கிரேடு ஆசிரியர்களும் தகுதி இல்லையெனக் கருதிவிட்டார்கள். ஒரு நாட்டில் வருங்கால சமூகத்தை உருவாக்கும் ஆசிரியர்களின் வேலையை விட முக்கியமான வேலை இருக்க முடியுமா? ஒரு நாட்டில் நாட்டின் முன்னேற்றத்திற்காக ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் செலவழிக்கும் பொழுது இந்த அடிப்படை நூறு ரூபாய் சம்பளம் இந்த ஆசிரியர்கட்கு மட்டும் கொடுக்க பணம் இல்லையா?

ஆரம்ப ஆசிரியரின் முக்கியத்துவத்தை அறிந்த நமது சர்க்கார் ஆவன செய்வார்களென எதிர்பார்க்கிருேம்.

ரிடையராகும் வயது

எந்த நிர்வாகத்தின் கீழ் வேலை செய்தாலும், எந்த கிரேடு ஆசிரியராயிருந்தாலும், ஆரம்பப் பள்ளியில் வேலை செய்தா

லும், உயர்தரப்பள்ளியில் வேலை செய்தாலும், ரிடையராகும் வயது 60 ஆக இருக்க வேண்டுமென்பது ஆசிரியர்களின் கோரிக்கை. அப்படி ஆசிரியர் வேலையில் ஈடுபட்டிருக்கும் யாவருக்கும் ரிடையராகும் வயது 60 என்று ஏற்படுத்துவதால் நாட்டிற்கும் அனுபவமுள்ள ஆசிரியர்களின் சேவை கிடைக்கிறது. தேவையுள்ள ஆசிரியர்கள் 30 வருட சர்வீஸுக்குப் பிறகும் வேலை பார்ப்பார்கள். 30 வருட சர்வீஸ் ஆனவுடன் ரிடையராக எண்ணும் ஆசிரியர்களும் ரிடையராகலாம். பலதரப்பட்ட நிர்வாகத்தில் பலவிதமாக 55, 60 என்று ரிடையராகும் வயதை வைத்துக்கொண்டிருப்பதால், ஸ்தல ஸ்தாபனப் பள்ளிகளிலிருந்து 55 வயது முடிந்ததும் உதவிபெறும் பள்ளிகளுக்கு மாற வேண்டிய அவசியம் ஆசிரியர்கட்கு ஏற்படுகிறது. அப்படி மாறுவதில் சம்பளக் குறைவு வெகுவாக ஏற்படுகிறது. ஒரே 60 வயதாக விதித்து விட்டால், பல சிக்கலான பிரச்னைகள் தீரும். சர்க்கார் இதைச் செய்யுமாறு வேண்டுகிறோம்.

சிறுவர்களுக்கு நீதிக்கதைகள்

G. கிருஷ்ணமூர்த்தி M. L. C.

ஆசிரியர்கள் வகுப்பில் சொல்லக்கூடிய கதைகள்

அஹிம்சை

ராமன் ஏழு வயதுப்பையன். நல்ல குணமுள்ள பையன். மற்ற சிறுவர்களிடம் அன்பாக நடந்துகொள்வான். பெரியோரிடம் மரியாதையாக நடந்து கொள்வான்.

எந்த ஜந்துவையும் துன்புறுத்த மாட்டான். காலையில் தாய் கோலம் போடும் பொழுது தானும் அந்த அரிசிமாவை யெடுத்து எறும்புகளுக்குப் போடுவான். எறும்புகளின் உணவுக்காகவே அரிசி மாவினால்தான் கோலம் போடவேண்டு மென்று தாய் சொன்னதை எல்லா சிநேகிதர்களிடமும் சொல்லுவான். கற்களைத் தூள் செய்து விற்கும் கோலமாவினால் கோலம் போட்டால் எறும்புகளைப் பட்டினி போடுவதாகுமென்பான்.

புத்தர் கதையைக்கேட்பதற்கு முன்பே இப்படிப்பட்ட பேச்செல்லாம் பேசுவான். புத்தர் கதையை வகுப்பில் கேட்டநாள் முதல் எந்தச் சிறுவனாவது ஒரு மிருகத்தைக் கல் எடுத்து அடித்தாலோ, துன்புறுத்தினாலோ, அவனுக்கு நல்ல புத்தி சொல்ல ஆரம்பிப்பான்.

அப்படி இரக்கமுடைய இராமன் தான் அறியாமல் ஒரு நாள் ஒரு ஜந்துவுக்கு தீங்கிழைத்துவிட்டான். தகப்பனார் வாங்கிக் கொடுத்த செருப்பைப் போட்டுக் கொண்டு வேகமாக நடந்து வகுப்பிற்குச் சென்றான். வழியில் ஒரு எறும்பை மிதித்துவிட்டான். எறும்பிற்கு முதுகு ஒடிந்தாற்போலாயிற்று. எறும்பு மிகவும் கஷ்டப்பட்டு வீட்டிற்குச் சென்றது. அன்று பூராவும் ராமனுக்கு மனதே சரியில்லை. தான் செய்த பாவச் செயலை எல்லா நண்பர்களிடமும் சொன்னான். வீட்டிற்கு வந்ததும், பெற்றோர்களிடமும் சொன்னான்.

இரவில் அதே ஞாபகத்துடன் தூங்கச் சென்றான். தன் கனவில் அதே எறும்பு தோன்றியது. எறும்பு வீட்டிற்குப் போனதும், அதன் மனைவியும் குழந்தைகளும் அலறினதும் "எந்த மனிதன் இப்படித் தங்களுக்குத் தீங்கிழைத்தான். அரிசி கிடைக்காமல் நேரம் ஆகிறதோ என்று பார்த்தோம். அரிசியும் கிடைத்து அதை இழுத்து வரும்பொழுது இப்படி நேர்ந்தது என்கிறீர்களே! மனிதருக்கு இருப்பதுபோல் நமக்கு ஆஸ்பத்திரி இருக்கிறதா? நாம் என்ன செய்வோம்?" என்று அலறுவதெல்லாம் அவன் கண் முன் தோன்றிற்று.

மறுநாள் காலை முதல் ராமன் மெதுவாகவும் வெகு ஜாக்கிரதையாகவும் எறும்புகள் செல்லும் பக்கம் செல்லாமலும் நடக்க ஆரம்பித்தான். அது மாதிரிப் பழக்கம் தன் நண்பர்களிடம் உண்டுபண்ணப் பாடுபட்டான். ஆனால் சில நண்பர்கள், "எங்கள் வீட்டில் எறும்

புகள் வந்தால் மருந்து போட்டுக்கொல்லுவார்கள். மண்ணெண்ணையைப் போட்டுக் கொல்லுவார்கள். நாங்களும் அதற்கு உதவி செய்யோம். எறும்புகள் சின்ன ஜந்துக்கள், கொன்றால் என்ன?" என்று ராமனைக் கேட்பார்கள். இராமனுக்கு "பாவம், எறும்புக்கு வலிக்கும்" என்பதைத் தவிர தகுந்த சமாதானம் சொல்ல முடியவில்லை. ஆனால், ராமனுக்கு உதவியாக அன்று இரவு ஒரு சம்பவம் நடந்தது. அவன் தகப்பனார் அவனை ஒரு கதை சொல்லுமிடத்திற்கு அழைத்துச் சென்றார். கதை சொல்லுபவர் 'அஹிம்சை' என்கிற விஷயத்தை யெடுத்துப் பேசியபோது அடியிற் கண்டவாறு சொன்னார்.

"ஒருவர் காசிக்குச் சென்றார். அங்கிருந்து ஒரு பெரிய குடம் நிறைய கங்கா தீர்த்தம் கொண்டுவந்தார். ஊருக்குத் திரும்பிய ஒரு வாரத்தில் ஒரு சமாராதனை நடத்தினார். கங்கா ஜலக் குடத்தைத் திறந்து அதிலிருந்து ஒரு கூஜாவில் ஜலத்தை எடுத்தார். கூஜாவிலிருந்து ஒரு பஞ்ச பாத்திரத்தில் அந்த ஜலத்தை எடுத்துக் கொண்டார். பஞ்சபாத்திரத்தில் ஒரு உத்தரணியைப் போட்டார். சாப்பிட உட்கார்ந்தவர்களுக்கு முதலில் ஒரு உத்தரணி ஜலத்தைக் கையில் போட்டுக்கொண்டே போனார். உத்தரணி ஜலத்தைச் சாப்பிட்டவர்களெல்லோரும் கங்கா ஜலம் சாப்பிட்டோம் என்று சந்தோஷப் பட்டார்கள். சபையோர்களே! உத்தரணி என்ற வெகு சிறிய கரண்டியில் இருந்ததால் கங்கா ஜலத்திற்குப் பெயர் மாறிற்று? இல்லை. உத்தரணியிலிருந்தாலும் பஞ்சபாத்திரத்திலிருந்தாலும், கூஜாவிலிருந்தாலும், குடத்திலிருந்தாலும் அது கங்கா ஜலம் தான். எறும்பு போன்ற தேகத்திலும், மனிதன் போன்ற தேகத்திலும் இருப்பது ஒரே உயிர்தான். உத்தரணியிலிருந்ததால் கங்கா ஜலம் இல்லையென்று எப்படிச் சொல்லமுடியாதோ அதே மாதிரிதான் சிறிய உடலில், எறும்பு உயிர் இருப்பதால், அதை உயிர் இல்லை என்று சொல்ல முடியாது. எந்த சிறிய ஜந்துவைக் கொன்றாலும் அது மனிதரைக் கொன்ற பாவம்" என்றார்.

இதைக் கேட்டதும், ராமன் வெகு சந்தோஷமடைந்தான். மறு நாள் தன் சொல்படி கேட்காத நண்பர்களிடத்தில் மேற்கண்ட கதையைச் சொல்லி மனமாற்றம் உண்டுபண்ணினான். எந்தச் சிறிய ஜந்துவைக் கொன்றாலும் அது ஒரு மனிதனைக் கொன்ற பாவத்திற்குச் சமம் என்று எல்லா சிறுவர்களும் உணர ஆரம்பித்தார்கள்.

தென் இந்திய ஆசிரியர் சங்கம்—விசேஷ மகாநாடு

1960 டிசம்பர் கடைசி வாரத்தில் விசேஷ மகாநாடு தஞ்சையில் கூடவிருக்கிறது. வீட்டுவாடகை அலவன்சும் வைத்திய வசதியும், ஆசிரியப் பென்ஷனர்களுக்குக் கிராக்கிப்படியும் கொடுக்கவேண்டிய நியாயத்தை வற்புறுத்தவே இம்மகாநாடு கூடவிருக்கிறது.

மகாநாட்டிற்கு வரும் ஆசிரியர்கள் முன்கூட்டியே தென் இந்திய ஆசிரியர் சங்கக் காரியதரிசிக்கு 30-11-1960க்கு முன் தெரிவித்தால், இட வசதி செய்து கொடுக்கப்படும்.

மகாநாட்டின் நடவடிக்கைகளில் கலந்துகொள்ள விரும்புவோர் தங்கள் விருப்பத்தை 30-11-1960க்கு முன் காரியதரிசிக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பிரதிநிதி கட்டணம் கிடையாது.

புதிய பஞ்சாயத்து முறையும் கல்வியும்

G. கிருஷ்ணமூர்த்தி, M.L.C.

ஒவ்வொரு அபிவிருத்தி வட்டாரத்திற்கும் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் ஏற்படுகிறது. பழைய பஞ்சாயத்துக்கள் தொடர்ந்து இருந்துவரும். 1-ம் வகுப்புப் பஞ்சாயத்துக்கள் டவுன் பஞ்சாயத்துக்கள் என்றும் 2-ம் வகுப்பு பஞ்சாயத்துக்கள் கிராமப் பஞ்சாயத்துக்கள் என்றும் அழைக்கப்படும்.

பஞ்சாயத்து யூனியன் வட்டாரத்திலுள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களும் சேர்ந்த கூட்டுறவு யூனியன். ஒவ்வொரு பஞ்சாயத்தும் தன் பிரதிநிதியை பஞ்சாயத்து யூனியனுக்கு அனுப்பும்.

ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஐந்துக்குக் குறையாமலும் பதினைந்துக்கு மேற்படாமலும் உறுப்பினர்கள் இருப்பார்கள். ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு தலைவரும் ஒரு உபதலைவரும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பஞ்சாயத்து யூனியனிலும் ஒரு தலைவர், ஒரு உபதலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். வட்டார அபிவிருத்தி அதிகாரி பஞ்சாயத்து யூனியன் கமிஷனராக இருப்பார்.

பஞ்சாயத்துக்களுக்கு இடைநிலைப் பள்ளிகளைத் துவக்குவதற்கும், பராமரிப்பதற்குமான பொறுப்பு கிடையாது.

ஆனால், ஆரம்பக் கல்வியைப் பற்றிய பொறுப்பு உண்டு. ஆரம்பக் கல்வி பற்றி திட்டமிடவோ, அபிவிருத்தி செய்யவோ பஞ்சாயத்துக்களுக்குத்தான் பொறுப்பு. ஆரம்பக் கல்வி விஷயத்தில், பஞ்சாயத்துக்களுக்கு பஞ்சாயத்துப் பள்ளிகள் தவிர தனி நபர்கள் நிர்வாகத்தால் நடத்தப்படும் பள்ளிகளை மேற்பார்வையிடவும், மான்யம் வாங்கிக் கொடுக்கவும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பஞ்சாயத்து யூனியன்களுக்கு வட்டாரத்தில் கல்வி விஸ்தரிப்பு பொறுப்பும், தனியார் நிர்வாகங்களுக்கு (ஆரம்பக் கல்வி சம்மந்தப்பட்டமட்டில்) மானியங்கள் அளிக்கும் பொறுப்பும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆசிரியர்கட்கு உதவும் புள்ளி விவரங்கள்
(1958-59 புள்ளிகள்)

நம் மாநிலத்திலுள்ள

ஆரம்பப் பள்ளிகள்	21,932		
ஆதாரப் பள்ளிகள்	3,142		
		ஆண்கள்	பெண்கள்
ஆரம்பப் பள்ளிகளிலுள்ள மாணவர்கள்		16,86,915	9,76,788
ஆதாரப் பள்ளிகளிலுள்ள மாணவர்கள்		3,01,750	1,91,185
ஆதாரப் பயிற்சிப் பள்ளி (ஆண்களுக்கு)	67		
ஆதாரப் பயிற்சிப் பள்ளி (பெண்களுக்கு)	38		
ஆண்கள் ஆதாரப் பயிற்சிப் பள்ளியிலுள்ள மாணவர்கள்		8,663	41
பெண்கள் ஆதாரப் பயிற்சிப் பள்ளியிலுள்ள மாணவர்கள்		—	4,670

தேசியக் கல்வி

G. கிருஷ்ணமூர்த்தி, M.L.C.

நாடெங்கும் இப்பொழுது ஒரே குரலாகக் கேட்பது ஒற்றுமையின் அவசியத்தைப்பற்றியே. நாட்டில் ஒவ்வொருவரும் தான் முதலில் இந்தியர், தன் மாவட்டமோ, மாநிலமோ அதற்குப் பிறகுதான் என்று நினைக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்த வேண்டுமென்று சொல்லிவருகிறோம். இது மிக்க அவசியம்.

நாட்டில் அப்படி வலியுறுத்த வேண்டிய நிலைமை எப்படி வந்தது என்று சற்று ஆராய்வோம். சுதந்திரம் கிடைத்த உடனேயே அயல் நாட்டினரால் எழுதப்பட்ட நம் சரித்திர புத்தகங்களை மாற்றியிருக்க வேண்டும். சுதந்திரம் வந்து 13 வருட காலமாகியும் நம் சரித்திர புத்தகங்கள் பழைய பாணியிலேயே பிரகாசிக்கின்றன. நாட்டின் வெவ்வேறு பாகங்களில் வாழ்ந்து வந்ததாகச் சொல்லும் நம் முன்னோர்களின் சரித்திரம் வெவ்வேறாகப் பிரித்து நடத்தும் பாடங்கள் அடங்கிய புத்தகங்களே இன்று இருக்கின்றன. நாம் அடிமையாக்கப்பட்ட விதங்கள் அலங்காரமாகச் சித்தரிக்கப்பட்ட பாடங்கள் பல உள. நம் தேசத்தவர்களுக்குள்ளே சண்டையிட்டதாகச் சொல்லும் கதைகளுக்குக் குறைவில்லை. நாம் நாகரிகத்தில் குன்றியிருந்ததாகவும் அயல் நாட்டார் நம் தேசத்தில் நாகரீகத்தைப் புகுத்தியதாகச் சொல்லும் விவரங்கள் அநேகம். புராணங்கள் என்ற பெயரால், நம் பழைய சரித்திரத்தை நம்பாமல் செய்யும் பகுதிகள் பல. சமூகப் பூசல்கள் உண்டாகும்படி தூண்டுதலையளிக்கக்கூடிய விவரங்களுக்குக் குறைவில்லை. உன்னதமான குணங்கள் விவரிக்கப்படாத இடங்கள் பல உண்டு. அனாவசிய விவரத் தேதிகளும் முக்கியமில்லாத மனிதர்களின் பெயரும் சரித்திர புத்தகத்தை நிரப்புகின்றன. அரசர்களின் ஜாபிதாவும், யுத்தங்களின் விவரங்களும், ஒற்றுமையை வளரவிடாமல் தடுக்கும் கதைகளையும் கொண்ட நம் சரித்திர புத்தகம், என்றைக்கு நல்ல முறையில் மாற்றி எழுதப்படுகிறதோ, அன்று முதல்தான் ஒற்றுமை வளர ஆரம்பிக்கும். இது இன்னமும் தாமதிக்கக்கூடாது.

இதைத் தவிர, நம் நாட்டின் புராதன நாகரிகத்தை யொட்டி, பழக்கவழக்கங்கள் ஏற்படுமாறு சுகாதாரத்தைப்பற்றி புத்தகங்கள் தேவை. எளிய வாழ்க்கையும், உன்னத நோக்கங்களும் கொண்டு வாழ்ந்த நம் நாட்டுப் பெரியோர்களின் கதைகள் 'Language Readers'-ல் ஏராளமாக எழுதப்பட வேண்டும். சமூகத்திற்குத் தீங்கிழைக்கும் கருத்துக்களையொட்டிய கலப்புக் கணக்குகள் புத்தகங்களிலிருந்து நீக்கப்பட வேண்டும். நாட்டினரின் ஒற்றுமையை வளர்க்கும் முறையிலும் சுயநலமற்ற சேவையைச் செய்ய தூண்டும் வகையிலும் Civics பாடங்கள் எழுதப்பட வேண்டும். கடவுளிடத்திலும், பெரியோரிடத்திலும் பயபக்தியுடன் நடந்துகொள்ள வேண்டிய அவசியத்தைத் தினசரி வலியுறுத்துமாறு 'கடவுள் வணக்கம்' பாட புத்தகங்களில் புகுத்தப்பட வேண்டும். இவ்வளவும் செய்வது கடினமல்ல. புகுத்துவதற்கு நீண்ட காலம் தேவையுமில்லை. இவ்வருடமே செய்யலாம். மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திலாவது செய்யலாம்.

செய்தால், வருங்கால மக்கள் நம் தேசத்தை உலகில் ஒரு சிறந்த தேசமாகச் சோபிக்கச் செய்ய முடியுமென்று நிச்சயமாய்க் கூறலாம்.

புதுச் சம்பளத் திட்டம்

தனி ஆசிரியர்கட்கு புதுச் சம்பளத் திட்டத்தினால் பிரச்னைகள் ஏற்பட்டால் தென் இந்திய ஆசிரியர் சங்கத்திற்கு எழுதவும்.

ஆன்மீகக் கல்வி

V. R. SUBRAMANIAN,

(Headmaster, A. C. C. Factory Ele. School, Madukkarai)

குழந்தை குடும்பத்தின் செல்வம், நாட்டின் பலம். அச் செல்வம் பலம் பெற ஒழுக்கம் தேவை. 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்பது வள்ளுவர் வாக்கு. அவ்வொழுக்கம் மாணவரிடம் கெட்டிருப்பதை யாவரும் அறிவர். கள்ள வியாபாரி முதல் கூசாமல் குறை கூறுகிறான் மாணவனை. குறைக்கு ஆதாரம் எங்கே? மாணவனிடம் மட்டிலா அது மலிந்து கிடக்கிறது? அதைப் போக்க மருந்து என்ன வென்பதை இங்கு ஆராய்வோம்.

கல்வி திட்டத்தில் குறை என்பர் சிலர். பெற்றோர் தவறு என்பவர் பலர். ஆசிரியர் தவறு என்பார் ஆராயாதவர். கலி காலம் முற்றிவருகிறது என்பார் கர்நாடகம்.

மனித வாழ்வு வளம்பெற வேண்டுமானால் பரந்த நோக்கமுடைய கல்வி (Liberal Education) அவசியம். அதாவது பொதுக்கல்வியும் ஆன்மீகக் கல்வியும் இணைந்த திட்டம். இதில் பொதுக்கல்வி காலமாறுதலை அடையலாம். ஆனால் ஆன்மீகக் கல்வி எக்காலத்துக்கும் எம்மதத்தவருக்கும் சம்மதமான கல்வி. வெளி நாட்டாரும் அதன் அடிப்படைக் கொள்கைகளை விரும்பும் கல்வி. அக்கல்வி ஒளிபெற்று, வளர்ந்து, பலமுற்றால்தான் உலகம் சமாதானமாய் இன்புற்று வாழமுடியும். இன்றைய உலக உள்ளத்திற்கு அதுவே அருமருந்து. தனி மனிதனும், சமூகமும், அரசாங்கமும் அருந்த வேண்டிய தேவ மருந்தும் அதுவே.

அத்தகைய ஒப்பற்ற மருந்தை மாணவர்களுக்குக் கொடுக்கும் மருத்துவர் யார்? அவர்தான் ஆசிரியர். நடமாடும் தெய்வமாய்க் கருதவேண்டியவர். கலங்கரை விளக்காய் தோன்றவேண்டியவர். ஆன்மீகச் சுடராய் விளங்க வேண்டியவர். பொன்னேபோல் போற்றவேண்டியவர். ஆனால் இன்று அவர் நிலை என்ன? ஒரு தாழ்ந்த தொழிலாளி. காலத்திற்கேற்ற கோலம். சமயத்திற்கேற்ற வேஷம். விதியை நொந்து வயிறு வளர்க்கும் வறியன். நிலையில்லா இடத்தில் நிலைமை கெட்டு ஏங்குபவன். ஆயினும், அவர் எப்படி ஓங்கவேண்டுமென்று விரும்பப் படுகிறது? நிலையில் தாழ்ந்தவனாயினும் நேர்மையில் உயர்ந்து இருக்கவேண்டும். பொருளில் ஏழையாயினும் பொறுப்பில் செல்வந்தனாய் இருக்கவேண்டும். கடனாளி ஆனாலும் கவலையைக் காட்டாமல் கல்விப்பணி நடத்தவேண்டும். மனம் குன்றினாலும் குணம் குன்றாதிருக்க வேண்டும். பிணி இருப்பினும் பொறுமையுடன் பணிபுரிய வேண்டும். இன்னல்கள் இருப்பினும் இனிமையாகப் பழக வேண்டும். எப்படி முடியும்? அரிது, அரிது ஆசிரியராய்ப் பிறத்தல் அரிது. சேற்றில் தாமரை தோன்றவில்லையா? சிப்பியில் முத்து காணவில்லையா? ஆம், உண்மைதான். ஆயிரத்தில் ஒருவர் அத்தகையோர். மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வரிசையில் அவர்தான் குரு. தன்னலமற்ற அத்தகைய தியாகிதான் அன்று குருகுலம் ஏற்படுத்தியது. 'அரைக்கினும் சந்தனம் தன் மணம் மாறாது. சங்கு சுட்டாலும் வெண்மை தரும்' என்னும் பண்புடைய ஆசிரியரால்தான் ஆன்மீக ஒளியை ஏற்றமுடியும்,பிரகாசிக்கச் செய்யவும் முடியும். அதனால் சீலமுள்ள ஆசிரியர்களையும் ஆன்மீகத் துறையில் சிறந்தவர்களையும் சேர்த்து மாவட்டக் கருத்தரங்குகள் பல நடத்த ஏற்பாடு செய்யவேண்டும். அரசாங்கம் சமரச சன்மார்க்கக் கதைகளை, நீதி போதனை வகுப்பிற்கு, பாடபுத்தகங்களாக வயதிற்கு ஈற்றவாறு வெளியிடல்வேண்டும். போதனையில், புறத்தூய்மை மட்டிலன்றி அகத் தூய்மையையும் வளர்க்க வற்புறுத்தப் படவேண்டும்.

நாகரிகம் சிறந்த இங்கிலாந்து, ஜர்மனி, பிரான்ஸ் ஆகிய மேல் நாடுகளி

லும் மதக்கல்வி புறக்கணிக்கப்படவில்லை. மதப்படிப்பால் மதிப்பு குறைந்துவிட்டதாக எண்ணுவது மில்லை. நாம் சாரத்தை விட்டு சக்கையைப் பிடித்துக் கொண்டு மதக் கல்வியைத் தாழ்வுபடுத்துகிறோம். தூஷிக்கிறோம். அகத் தூய்மையையும் மனச்சாட்சியையும் மதிப்பதில்லை. ஏன் என்று கேட்டால் அரசாங்கம் மீது பழி சுமத்திவிடுகிறோம். நம் அரசாங்கம் மதசார்பற்றதாயினும் மதத்தை விட்டுவிடச் சொல்லவில்லை. நம் தேச பிதாவும், அவர் கொள்கைகளைப் பின்பற்றும் அரசியல் வாதிகள் பலரும் மதமில்லாதவர்களா? மதவெறியும் ஆன்மீக ஒளியும் வெவ்வேறானவை. மதவெறி துவேஷத்தைப் பரப்பும். ஆன்மிக வளர்ச்சி அன்பைப் பெருக்கும். அரிச்சந்திரன் நாடகம் பார்த்தும் தாயின் நீதிக்கதைகள் கேட்டும் ஆன்ம ஒளி பெற்றவர் அல்லவா மகாத்மா காந்தி. பித்தலாட்டம் நிறைந்தது அரசியல் என்று நினைத்திருந்த காலத்தில் உண்மை, சத்தியம், அஹிம்சை என்ற புனித சக்திகளைப் புகுத்தி அரசியல் வெற்றிகள் பலதுறைகளில் அவர் கண்டவர் அல்லவா? சமாதான தூதர் என்று உலகம் போற்றும் நம் பிரதமர் நேருவும் அந்த ஆத்ம ஒளியின் சக்தி அல்லவா? சிவாஜி வீரரானது தன் தாய் சிறுவயதில் போதித்த கதைகளால் அல்லவா? ஆகவே ஒரு நாட்டின் பழங்கதைகள் பெருமைக்கு மட்டுமல்ல, ஒருவனை வீரனுக்கவும், ஞானியாக்கவும் உதவுகின்றது என்பது மறுக்கவும், மறக்கவும் முடியாத உண்மையாகும். அதனால் தான் பல்லாண்டுகள் ஆயினும் உயிர்க் கதைகளாக அவை விளங்கி வருகின்றன. அக் கதைகள் பல நம் மாணவர்கள் சிறு வயதிலிருந்தே அறியவேண்டும் என்பதை நான் வற்புறுத்துகிறேன்.

இக் காலத்தில் ஆதாரக் கல்வி அல்லது அதன் பாணியில் செயல்படும் பாடசாலைகள் பலவற்றில் பஜனை முக்கியத்துவம் பெற்றிருப்பது வரவேற்கத் தக்கதொரு அம்சமாகும். நன்னெறிகளைக் கடைபிடிக்க நல்லதொரு வழியாயிற்று. பக்தியையும் கல்வியையும் கலந்து போதிப்பதே சாலச் சிறந்த முறை. அதுவே தற்கால மாணவர்களுக்கு ஏற்ற நன்மருந்து. ஒழுங்கீனம் போக்கும் ஒப்பற்ற மருந்து. நம் நாட்டின் பழைய மருந்து தனிச்சிறப்புப்பெற்ற உள்நாட்டு மருந்து. அதுவே உலகம் உய்விக்கும் உண்மை மருந்து. இனி அம்மருந்தை அருந்தி மறுவாழ்வு காண்போமாக.

“ எத்திசையின் எம் மொழியில் எவர் வாய்ச் சொல்லில்
எப்படியாய் வரும் கதைகள் எதுவானாலும்
சத்தியத்தின் வழிகாட்டும் அறிவையெல்லாம்
தனதாக்கிக் கலை வளர்த்தல் தமிழன் பண்பாம். ”

ஆசிரியர் உரிமை சாஸன தினம்

1960 நவம்பர் 20-ம் தேதி உரிமை சாஸன தினமாக நாடெங்கும் கொண்டாடும்படி அகில இந்திய ஆசிரியர் சங்கம் கேட்டுக் கொண்டிருக்கிறது.

சென்னை மாநிலத்தில் ஆசிரியர்களில் பெரும்பாலோருக்குக் கிடைக்க வேண்டிய ‘வேலை நிரந்தரம்’ என்ற உரிமையை அந்த தினத்தன்று கூட்டம் போட்டு சர்க்கார் பள்ளி ஆசிரியர்களுக்குள்ள வேலை நிரந்தரம், மற்ற ஆசிரியர்களுக்கும் தேவை யென்பதை வற்புறுத்துமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

காரியதரிசி.

செய்தித் திரட்டு

திருச்சி ஜில்லா ஆசிரியர் சங்கம்

திருச்சி நேஷனல் காலேஜ் உயர்தரப் பள்ளி சரஸ்வதி ஹாலில் ஆசிரியர்கள் திரளாகக் கூடி 19-9-1960-ல் தென் இந்திய ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. G. கிருஷ்ணமூர்த்தி, M.L.C. அவர்கட்கு ஒரு வாழ்த்துப் பத்திரம் வழங்கினார்கள். நேஷனல் காலேஜ் உயர்தரப்பள்ளி தலைமை ஆசிரியர் திரு. R. பூவராகன், M.A.,L.T. வரவேற்பளித்தார்.

ஜில்லா சங்கத் தலைவர் திரு. K. N. ரெங்கசாமி அய்யர், B.A.,L.T., 1945-லிருந்து திரு. G. கிருஷ்ணமூர்த்தி செய்துவரும் பணியைப் புகழ்ந்து பேசினார்.

ஜில்லா சங்க டவுன் காரியதரிசி திரு. வேணுகோபால், B.A.,L.T., திருச்சி ஜில்லா சங்கக் காரியதரிசியாக திரு. G. கிருஷ்ணமூர்த்தி செய்த பணியைப் பாராட்டினார்.

திரு. G. கிருஷ்ணமூர்த்தி, M.L.C. "ஆசிரியர்களும், சம்பளக் கமிஷன் சிபார்சுகளும்" என்னும் பொருள் பற்றிப் பேசினார். வீட்டு வாடகைப்படி, வைத்திய வசதி, ஆசிரியர் பென்ஷனர்களுக்குக் கிராக்கிப்படி கொடுபடாததைப்பற்றியும், குறைந்தபக்ஷ ஊதியமான ரூ. 100 லோயர், ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்குக் கொடுபடாதது பற்றியும் செகண்டரி கிரேடு ஆசிரியர்கட்கு 5 வருட சர்வீஸுக்குப் பிறகு ரூ. 4 வருட உயர்வு 8 ரூபாயாக அதிகரிக்கப்படாமல் ரூ. 3-ஆகக் குறைக்கப்பட்டிருப்பதைப் பற்றியும் சுட்டிக்காட்டி, ஆசிரியர்கள் ஒன்றுபட்டு யூனியனைப் பலப்படுத்தி இக்குறைகளைத் தீர்த்துக்கொள்ள முன்வர வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்.

காரியதரிசி வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிந்தது.

வாலாஜாபாத்தில் ஆளுக்கொரு நூல் நிலையத் திட்டத் தொடக்க விழா

வாலாஜாபாத் அரசினர் மகளிர் ஆதாரப் பயிற்சிப் பாடசாலையில் சென்னை மாநிலக் கல்வி நெறியாளர் திரு. நெ. து சுந்தரவடிவேலு, எம்.ஏ.,எல்.டி., அவர்களால் மேற்படி திட்டம் 23-10-1960 அன்று தொடங்கி வைக்கப்பெற்றது.

வாலாஜாபாத்தில் நடைபெறும் ஆண்கள் ஆதாரப் பயிற்சிப் பள்ளியிலும், பெண்கள் ஆதாரப் பயிற்சிப் பள்ளியிலும் பயிலும் மாணவ மாணவிகள் 350 பேர்களில் ஒவ்வொருவரும் ரூ. 15 பெறுமான நூல்களை வாங்கி ஒவ்வொருவரும் ஒரு நூல் நிலையம் வைத்துக் கொள்ளத் துவங்குகிறார்கள். நெறியாளர் அவர்கள், ஆசிரியர்களும் ஆசிரிய மாணவர்களும் அறிவு வளர்ச்சியைக் கருத்துடன் ஓம்ப வேண்டுமெனக் கூறினர்.

வாலாஜாபாத் ஊர்மன்றத் தலைவர் திரு. வா. து. நடராஜன் அவர்களும், அரசினர் ஆதாரப்பயிற்சிகள் இரண்டின் தலைமையாசிரியர்களும், கழக உயர் பள்ளித் தலைமையாசிரியர் அவர்களும் நெறியாளர் அவர்களுக்கு வரவேற்பு அளித்தார்கள்.

நெறியாளர் அவர்கள் பேசுகையில் ஆதாரப் பாடசாலைகளில் செயல் மூலம் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்றும் மாணவர் அறிவு வளர்ச்சியில் நிரம்பக் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கூறினார்.

தஞ்சை மண்டலப் பெண் பாடசாலை ஆய்வாளர் திருமதி விசாலாட்சி அம்மையாரும், செங்கை மாவட்டக் கல்வி அலுவலர் திரு. ஜோஸப் அவர்களும் கல்வித் துறையைச் சேர்ந்த வேறு பலரும் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் ஆதாரப் பயிற்சிப் பள்ளித் தலைமையாசிரியர் திரு. நரசிம்மலு பி.ஏ., எல்.டி, அவர்கள் நன்றி கூற விழா இனிது நிறைவேறியது.

பிலிப்பைன்ஸ் தீவிலிருந்து கல்வித்துறைத் தலைவர்கள் வருகை

வாலாஜாபாத் இந்துமத பாடசாலையையும் அதில் கல்வி பயிலும் 1000 மாண

வர்கள் பெற்றுவரும் சமூகப் பயிற்சிகளை யும் நேரில் பார்ப்பதற்காக பிலிப்பைன் தீவிலிருந்து ஒரு வாரமாக இந்தியாவி லுள்ள கல்வி நிலையங்களையெல்லாம் பார்வையிட்டுவரும் டாக்டர் பெர்ஞர் டிஞே, வைகாண்டி, மடாலி, பால்மி ஆகியோர்கள் 11-10-60அன்று வாலாஜா பாத் வந்தார்கள். சென்னை மாகாணக் கல்வித்துறை டைரக்டர் நேர் அலுவலர் திரு. ரயான் அவர்களும், செங்கற்பட்டு மாவட்டக் கல்வித் துறைத் தலைவர் திரு. டான் ஜோஸப் அவர்களும் வேறுபலரும் வந்திருந்தார்கள்.

பாடசாலையில் மாணவர்கள் பலவித தொழில்களில் ஈடுபடுவதையும், பயிர்ப் பண்ணை, பொது சுகாதாரம் முதலிய வற்றை மாணவர்களே பார்த்துக்கொள் வதையும், மாணவர் இல்லத்தில் காய்கறி நறுக்குதல், இடம் துப்புரவு செய்தல், நீர் கொண்டு வருதல், உணவு பரிமாறுதல் முதலியவற்றை மாணவர்களே செய் வதையும் கண்டு தலைவர்கள் மகிழ்ந்தார் கள்.

மாணவர்களின் உடற்பயிற்சி, குதிரை, காவடி, லெசிம் முதலிய நடனங்களைக் கண்ட பின்னர் வந்த பெருமக்கள் மாணவர்களை வாழ்த்திஞர்கள். இந்தியா விற்கு வந்தது முதற்கொண்டு பல பாட சாலைகளைத் தாங்கள் பார்த்ததாகவும் அவைகளில் இதுவே மிகச் சிறந்த தென்றும், இங்குத் தங்களுக்கு அளித்த அன்பு வரவேற்புக்கு நன்றி செலுத்துவ தாகவும் கூறிஞர்கள். இங்குக் கல்வி சம்பந்தமாகச் செய்துவரும் ஏற்பாடுகள் யாவும் பின்பற்றற்குரியவை என்றும் பிலிப்பைனிலிருந்து முதன் முதல்வரும் தாங்கள் இங்கிருந்து பல நற்செய்திகளை ஊருக்குக் கொண்டு போவதாகவும் கூறி ஞர்.

பாடசாலையின் சார்பிலுள்ள வள்ள லார் மாணவர் இல்லத்தில் 850 மாணவர் கள் அமைதியாக அமர்ந்து, வழிபாடு செய்து உணவுகொண்ட காட்சியைப் பார்த்து மகிழ்ந்தார்கள். இல்லத்தில் உணவு கொண்ட பிறகு புறப்பட்டார் கள்.

காந்தி ஜெயந்தி, (கதர் வார) விழா

திண்டிவனம் குஷால்சந்த் முதல்நிலை ஆதாரப் பள்ளியில் அக். 14-ஆம் தேதி காந்தி ஜெயந்தி (கதர் வார) விழா கொண்டாடப்பட்டது.

காலையில் மாணவ மாணவியரும், ஆசிரியர்களும் சேர்ந்து பள்ளி, அதன் சுற்றுப்புறம் ஆகிய இடங்களைத் துப்புரவு செய்து புனிதமாக்கினர்.

மாலை நிகழ்ச்சியில் மாணவ மாணவி யரும், ஆசிரியர்களும் சுமார் ஒரு மணி நேரம் மனதை ஒரு நிலைப்படுத்தி, பூர்ண அமைதியுடன் அகண்ட நூற்பு நூற்ற னர்.

பின் 'அண்ணு' திரு. S. சுப்ரமணிய ஐயர் 'பகவத் கீதை' விளக்கமும், வித்துவான் திரு. N. தேசிகன் 'குறள், விளக்கமும், திருமதி. S. பூங்காவனம் 'பைபிள்' விளக்கமும் செய்தனர்.

மாணவன் R. கந்தசாமியும் மாணவி யர் கோஷ்டியும் சேர்ந்து பக்தி ரஸம் ததும்ப 'காந்தி பஜனை' பாடினர். ஆசிரி யர்களும், மற்றோரும் பக்திப் பரவசத் தில் ஆழ்ந்தனர். இறுதியாக 'ரகுபதி ராகவ' பாடலுடன் விழா இனிது முடிந் தது.

Whatever Books you require in Tamil & English

Please send your library orders to

SELVI PATHIPPAHAM, KARAIKUDI-1

செல்வியின் புதிய நூல்கள்

		ரூ.
இரா. சாரங்கபாணி		
திருக்குறள் உரைவேற்றுமை		
	அறம்	4-00
,,	பொருள்	7-00
தமிழண்ணல்		
காதல் வாழ்வு (நாட்டுப் பாடல்)		2-25
சுத்தானந்த பாரதியார்		
மணிமேகலை அமுதம்		3-50
நாக. முத்தையா		
குழந்தைப் பாடல்கள்		1-50
கல்வி கோபாலகிருஷ்ணன்		
சூரப்புலி		1-00
ஜனகுமாரி		
குழந்தைக்கு மருந்துகள்		1-50
குழந்தை வேண்டாம் என்ருல்?		1-00

செல்வி பதிப்பகம் :: காரைக்குடி

ஐரோப்பாவின் மிக உயரமான கட்டிடம்

பவேரியாவின் கவர்ச்சி மிக்க தலைநகரான ம்யூனிக்கில் புதிய தொரு கவர்ச்சி அம்சம் உருவாகப் போகிறது. தலை சிறந்த கட்டிட நிபுணர்களும், விஞ்ஞானிகளும் சேர்ந்து, அங்கே, 1,000 அடி உயரத்தில் ஒரு கோபுரம் கட்டத் திட்டமிட்டிருக்கிறார்கள். ம்யூனிக்கில் மையப் பகுதியில் டெலிவிஷனுக்காகவும், பார்வைக்காகவும் இந்த கோபுரம் கட்டப்படும். இந்த மாபெரும் கோபுரம், பாரிஸ் நகரத்து ஐஃபல் கோபுரத்துடன் உயரத்தில் போட்டிபோடும். ஐரோப்பாவின் மிக உயரமான அமைப்பு என்ற பெயர் இனி ஐஃபல் கோபுரத்துக்கு இருக்காது; ம்யூனிக் கோபுரம் அந்தப் பெயரைத் தட்டிக் கொண்டு போய்விடும், "ஆல்ப்ஸ் மலையின் கோபுரம்" என்னும் கம்பீரமான பெயருடன் அது உருவாகப் போகிறது.

ஆல்பைன் கோபுரத்தைக் கட்டுவதற்கு 20 மாதங்கள் பிடிக்கும். அதன் அடித் தளத்தின் விட்டம் 50 அடி இருக்கும். 750 அடி உயரம் வரையில் அந்த கோபுரம் போகப்போக குறுகலாகிக் கொண்டு செல்லும்; அதற்குள் அதன் விட்டம் 25 அடியாகக் குறைந்துவிடும். இறுதியில் ஊசி முனை போன்ற உச்சியுடன் கோபுரம் முடிவடையும். 660 அடி உயரத்தில், ஆறு மாடிக் கட்டிடம் ஒன்று அமைக்கப்படும்; அதில் உணவு விடுதிகளும், சிற்றுண்டிச் சாலைகளும் இடம் பெறும். கோபுரத்தின் இந்தக் "கடைப் பகுதி", தனது அச்சிலேயே மெதுவாகச் சுற்றி வரக் கூடியது. கோபுரத்தைச் சுற்றிப் பார்க்க வருவோர் அந்தப் பகுதியிலிருந்து ம்யூனிக் நகரத்தின் சௌந்தர்யத்தைக் கண்டு மயிர்க் கூச்செரிவார்கள். அது மட்டுமா? ஆல்ப்ஸ் உலகம் முழுமையும், ஆஸ்ட்ரியா, ஸ்விட்ஸர்லண்ட் நாடுகளின் பகுதிகளெல்லாம் கூட அங்கிருந்து தெரியும். அந்தக் "கடைப் பகுதி"யின் உச்சியில் இரண்டு பெரிய காட்சி மேடைகள் இருக்கும். அவற்றில் 1,000 பேர் நின்று பார்க்க இடம் இருக்கும். கோபுரத்தின் மேல் மாடியிலிருந்தவாறு, ம்யூனிக் நகரத்தின் போக்குவரத்துப் போலீஸார் பத்து லட்சம் மக்களைக் கொண்ட அந்த நகரத்தின் போக்குவரத்துப் பாதைகளை ஸர்வே செய்ய முடியும். கோபுரத்தில் மூன்று எலிவேடர்கள்—அதாவது,ஆட்களை ஏற்றி மேலும் கீழும் சென்று வரக் கூடிய கூண்டுகள்—உண்டு. ஒவ்வொன்றும் நிமிஷத்திற்கு 25 பேர் வீதம் 700 அடி உயரத்துக்கு இட்டுச் செல்லக் கூடியதாயிருக்கும். 25 லட்சம் டாலர் செலவில் உருவாகப் போகும் ம்யூனிக் கோபுரத்தின் முனையில் டெலிவிஷன் சாதனங்களும், ஏரியல்களும் பொருத்தப்பட்டிருக்கும். ஃபெடரல் ஜெர்மன் குடியரசின் தொலைதூர தகவல் தொடர்புக்கான சாதனங்களும் அதில் இணைக்கப்பட்டிருக்கும்.

—'இன்ட்ரா'.

ஆரம்ப ஆசிரியர் திரளாக வருக!

தென் இந்திய ஆசிரியர் சங்க

விசேஷ மகாநாடு

தஞ்சை

26—12—1960 திங்கட்கிழமை

பிரதிநிதி கட்டணம் கிடையாது

GOVERNMENT ORDERS

PROCEEDINGS OF THE DIRECTOR OF PUBLIC INSTRUCTION, MADRAS-6

Dis. No. 6901/60 Dated 12-10-'60

GOVERNMENT OF MADRAS
Education and Public Health Dept.

G.O. Ms. No. 2074 Education, Dated 27th Sept., '60

ABSTRACT

ELEMENTARY EDUCATION — Aided Schools — Continuance of untrained teachers in service — Rule 5(a) of the rules for aid — orders passed.

Read :
Ref : G.O. Ms. No. 15, Education Dated 4-1-1960.

From the Director of Public Instruction Rc. No. 1119-B7/60, Dated 14-6-1960.

ORDER :

The Government accept the recommendations of the Director of Public Instruction and direct that grants be assessed for 1960-61 on behalf of the following categories of unqualified teachers in aided elementary schools :

(1) Teacher - Managers (Untrained or trained but failed).
(2) Teachers who were trained but failed in T.S.L.C. Examination.
(3) Untrained teachers who had put in 15 years of service on 1-6-'59.

The provisions in para 5 of G.O. No. 639 Education, dated 2-4-1958 should be satisfied in the case of these teachers also.

This order issues with the concurrence of Finance Department, vide their U.O. No. 99330/EA/60-I, dated 21-9-1960.

(By order of the Governor)
(Sd.) K. V. RAMANATHAN,
Deputy Secretary to Government.

(True copy)

Copy of Preceedings L. Dis. 3767 B7/60 dated 9-9-'60 of Director of Public Instruction, Madras-6.

Sub : Elementary Education — Teachers — Trained in Languages other than the medium of instruction of the school appearing for the languages concerned only- regarding.

Ref : Director's Proceedings Dis. 493/60 dated 23-1-60.

In Director's Proceedings cited, instructions have been issued to the District Educational Officers that teachers who are trained in a language other than that which is adopted as medium of instruction in the schools in which they are employed should appear for the E.S.L.C. or S.S.L.C. public examination as the case may be, according to their grades of training certificates (Elementary or Secondary) availing themselves of the nearest two chances and pass the language adopted as medium of instruction in the school in which they are employed taking it as first language. Certain teachers have raised doubts whether they have to appear for the language subject only or whether they have to appear for all the subjects through the medium of instruction of the school in which they are working.

The District Educational Officers are informed that teachers trained in a language other than that which is adopted as medium of instruction in the schools in which they are employed should appear for the E. S. L. C. or S. S. L. C. public examination, as the case may be according to their grades of training certificates (Elementary or Secondary) availing themselves of the nearest two chances and pass the **Language subject** only adopted as medium of instruction in the school in which they are employed taking it as first language.

(Sd.) M. D. PAUL,
for *Director of Public Instruction.*

(True copy)

Copy of Proceedings Rc. 1992 B7/58 dated 5-11-'59 of the Director of Public Instruction, Madras-6.

Sub : Elementary Education-Aided Elementary Schools-absorption of teachers who are trained in languages other than the medium of instruction of the schools-regarding the orders passed.

Read :

(1) From the Divisional Inspector of Schools, Coimbatore Rc. 730 E2/58 dated 15-7-'58, 15-9-'58, 3-11-'58, 22-5-'59, 25-6-'59, 19-7-'59 and 20-8-'59.

(2) From the District Educational Officer, Chingleput Rc. 160/'59 dated 25-9-'59.

The Divisional Inspector of Schools, Coimbatore and the District Educational Officer, Chingleput have brought to the notice of the Director for orders regarding the cases of teachers who were trained in languages other than the medium of instruction of the school and who are working without any definite orders regarding their continuance in service.

The Director after careful consideration of the question considers that it is not desirable to entertain teachers trained in a language other than the language in which instructions is imparted to pupils in the school unless the teacher, if he is a higher Elementary grade, passes the VIII Standard Public examination taking Tamil or Telugu whichever is the medium of instruction in the school and if he is a Secondary Grade trained passes the S.S.L.C. Public Examination taking Tamil or Telugu whichever is the medium of instruction in the school. Government are being addressed to amend the rules suitably.

In the case of such teachers already in service, the principle accepted by Government in G.O. Ms. No. 1957 Edn. dated 28-11-'57 communicated in Director's Proceedings Dis. 40/58 dated 4-1-'58 and in Government Memo No. 145796 E2/58-1 Edn. dated 21-11-'58 communicated in Director's Proceedings Dis. 8248/58 dated 1-12-58 may be made applicable to teachers in aided elementary schools also. If a teacher is a higher elementary grade trained, he should pass the VIII Standard Public Examination taking Tamil or Telugu whichever is the medium of instruction in the school in the next two chances i.e. 1961 or 1962 and if he is a Secondary Grade trained teacher, he should pass the S.S.L.C. Public Examination in the language in 1961 or 1962. If such teachers have already passed the VIII Standard Public Examination or S. S. L. C. Public Examination, they may be continued in service.

(Sd.) M. D. PAUL,
for *Director of Public Instruction.*
(True Copy)

தஞ்சை ஜில்லா ஆசிரியர் சங்கம்

பொன் விழா

27—12—1960 தஞ்சையில்

நடைபெறுகிறது

பொருட் காட்சி 27-12-1960—30-12-1960

"தமிட்குடி"

(ஆ. வேலுமணி)

முல்லைக் கொடிகள் படர்ந்திருக்க,
　　முடிமன்னன் பாரி தேரீந்தான்.
இல்லை யென்றும் சொல்லாதுயிரை,
　　இனிது கொடுத்தார் குமணவள்ளல்,
தொல்லை யகற்றி வாழ்ந்துநிதம்,
　　தொடுத்தார்புகழை பாரினிலே,
வில்லையுடைய நெடுவேல் ஓரி,
　　வீரன் வாழ்ந்ததும் தமிழ்நாடு.

காத லின்மிகுந்த தத்துவத்தைக்
　　கண்டான் தமிழன் உலகினிலே,
ஓதலில் சிறந்த வான்குறளை
　　ஒளிபெறச்செய்தார் வள்ளுவரே.
ஈதலில் ஒருவர் இளங்கோவன்,
　　ஈண்டுசெய்தார் சிலம்பின்கதை.
சாதலைக் காட்டிலும் மிக மேலாம்,
　　சமூக மானம் ஒன்றெனவே.

தந்தான் தமிழன் என் திசைக்கும்
　　தரித்திரமோட்ட வளர்ந்தவனே.
வந்தவர் தமக்கு உபச்சாரம்
　　வாழக்கொடுத்தான் தமிழினத்தோன்,
சொந்தமொழியும் தன்னுயிரும்,
　　செந்தமிழ்நாட்டிற்கு உரிமையன்றோ,
இந்த உலகம் உள்ளமட்டும்
　　இருப்பான் தமிழன் புகழுடனே.

சிங்களம் சென்று வெற்றிகண்டு
　　சிறப்புடன் வாழ்ந்தவர் தமிழ்மன்னர்
பொங்கும் காவிரி ஆற்றிற்கு
　　பொருத்தினார்கரையை ஒருமன்னர்
எங்கும் பனிசூழ் இமயத்திலே
　　ஏற்றினார்கொடியை ஒருமன்னர்.
தங்கும் தரணியின் புகழ்பாட,
　　தழைத்தது எங்கள் தமிட்குடியே!

அகில இந்தியக் கல்வி மகாநாடு

கான்பூரில் 27-12-1960 முதல் 31-12-1960 வரை நடக்கும் மகா நாட்டிற்குச் செல்ல விரும்புவோர் தென் இந்திய ஆசிரியர் சங்கத்திலிருந்து எழுதி விபரம் அறிந்துகொள்ளலாம்.

Printed by Sri T. K. Venkatesan at the Jupiter Press Private Ltd., 109-C, Mount Road, Madras-18. Edited by Sri G. Krishnamurthi, M.L.C. and Published by Sri S. D. Krishnamurthi Rao, B.A., L.T., for the S. I. T. U. at Raja Annamalaipuram, Madras-28.

Regd. No. M. 3473
Registered with the Registrar of Newspapers for India under R. N. No. 1230/57.

எலிமெண்டரி பாடசாலைக்குரிய

எமது புதிய புத்தகங்கள்

புதிய பாடதிட்டத்தை அனுசரித்து எழுதியவை

1—5-ம் வகுப்புகளுக்குரியவை

பொங்கல் தமிழ் வாசகம்

முதல் புத்தகம்	(முதல் வகுப்பு)	37 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	40 ,,
மூன்றும் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	50 ,,
நான்காம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	65 ,,
ஐந்தாம் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	85 ,,

கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு

முதல் புத்தகம்	(முதல் வகுப்பு)	40 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	40 ,,

லீலாவதி சுலப கணிதம்

முதல் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	90 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	ரூ. 1 00

நவீன சுலப கணிதம்

முதல் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	ரூ. 1 25

நவீன சமூக வரலாறு

முதல் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	45 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	75 ,,

புது முறை சமூக வரலாறு

முதல் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	ரூ. 1 12
இரண்டாம் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	ரூ. 1 90

நமது இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

முதல் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	40 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	40 ,,
மூன்றும் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	80 ,,

கிண்டர்கார்டன் தமிழ் அப்பியாசங்கள்

முதல் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	60 ந.பை.
இரண்டாம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	60 ,,
மூன்றும் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	60 ,,

பி. ஜி. பால் அண்டு கம்பெனி

புத்தக வியாபாரிகள்

பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை-1